

"எனது வாழ்க்கையே எனது செய்தி"

மகாத்மாகாந்தி

# காந்தீயம்


இருதிங்கள் இதழ்

மலர் ~ 19 இதழ் ~ 1 2004~அக்டோபர்~ 2 விலை: 10 /=





யாழ்ப்பணம் கந்தர்மடம் சிவகுருநாத பீடம் 22.08.2004 அன்று விழாக்கோலம் பூண்டிருந்தது. அன்று தான் இலங்கை காந்தி சேவா சங்கம் தனது செயற்பாடுகளை மீளத் தொடங்குவதற்கு கால்கோள் இடப்பட்டது.

சிவகுருநாத குரு பீடாதிபதி ஸ்ரீமத் சோமாஸ்கந்தவேள் சுவாமிகளது அருளாசியுடன் தொடங்கிய இந்நிகழ்வுக்கு சங்க ஸ்தாபகர்களுள் ஒருவரான திரு. சோ. தம்பிப்பிள்ளை அவர்கள் தலைமைவகித்தார்.

இந்நிகழ்வில் யாழ் குடாநாட்டின் பல பகுதிகளில் இருந்தும் வருகை தந்திருந்த காந்தீயத் தொண்டர்கள் காந்தீயம் தொடர்பான தமது கடந்தகால அனுபவங்களை நினைவு கூர்ந்ததுடன் வருங்காலத்தில் காந்தி சேவா சங்கம் செயலூக்கத்துடன் தொண்டாற்ற வேண்டுமெனவும் வேண்டுகோள் விடுத்தனர். அதற்குத் தம்மாலியன்ற பங்களிப்பை நல்குவதாகவும் வாக்களித்தனர்.

நிகழ்வின் முக்கிய அமிசமாக காந்தீய செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கென செயற்குழுவொன்று அமைக்கப்பட்டது. இக்குழுவில் அங்கம் வகிப்போர் விபரம் வருமாறு

(1) தலைவர் திரு. சோ. க. தம்பிப்பிள்ளை (2) உப தலைவர்கள்: திரு. க. சிவராமலிங்கம், திரு. அ. இராமநாதன். (3) செயலாளர் திரு. க. இராசரத்தினம். உபசெயலாளர்கள்: செல்விகள். க. சிவப்பிரியா, வி. பிரபாலினி. பொருளாளர்: திரு. மாணிக்கம் லீலாவிநோதன் "காந்தீயம்" பத்திரிகை ஆசிரியர் திரு. தி. உதயசூரியன்


...................... 8ஆம் பக்கம் பார்க்க


**கடமையைச் சரிவரச் செய்யுங்கள்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "மில்க்வைற்" கனகராசா அவர்கள்

காந்தீய சிந்தனைவளர்ச்சிக்கு கனகராசா அவர்கள் ஆற்றிய பங்களிப்பு அளப்பரியது. காந்தியடிகள் பணம் படைத்தவர்கள், தாம் தர்மகர்த்தாக்கள் என நினைக்கவேண்டும் என்றார். அதனைப் பூரணமாகக் கைக்கொண்டவர் கனகராசா அவர்கள். தாம் சம்பாதித்தவைகள் இறைவனால் தமக்குத் தரப்பட்டவை, தாம் வெறும் பாதுகாவலனே எனக்கருதினார். அழைக்கும் இடங்கள் எங்கும் சென்று நற்சிந்தனைகளைப் பரப்பினார். நூலகங்கள், கல்வி நிலையங்கள் எங்கும் குறித்த நேரத்துக்கு முன்னனே சென்று, இருப்பவர்களுடன் அளவளாவி, அவர்கள் தேவைகளை அறிவார். புத்தகங்கள் நூற்றுக்கணக்கில் கொடுக்கப்போய், அவற்றைப்பத்திரமாக வைக்க அலுமாரி இல்லை என அறிந்து, அடுத்தவாரம் அலுமாரியை அனுப்புவார். பெரியோர்களின் அருள் வாக்குகளை கைநூல் வடிவில் ஆயிரக்கணக்கில் அச்சிட்டு, கேட்பவர்களுக்கு எல்லாம் இலவசமாய் வழங்கினார். "மில்க்வைற் செய்தி" என்ற சஞ்சிகையை வெளியிட்டு மாணவர், ஆசிரியர், அறிவுநாடும் அனைவருக்கும் பயனுள்ள தாக்கினார். அவரது ஆஸ்தான கவிஞர் போல விளங்கிய ஆசிரியர் க.சி. குலரத்தினம் அவர்களின் பொது அறிவுப்பொக்கிஷங்கள் எல்லாம் அச்சஞ்சிகையில் வெளிவந்தன. கற்றோர்கள், மகான்களை நாடிச் சென்று, அவர்கள் நல்லுரைகளைக்கேட்டதுடன், அவர்கள் தேவைகளை மெல்ல அறிந்து, இரண்டாம் ஆளுக்குத் தெரியாமல் அவற்றைப் பூர்த்தி செய்தார். காந்தியடிகளின் கொள்கையில் ஒன்றான இயற்கைவைத்தியம், மூலிகைகளைவளர்த்தல், மரம் வளர்த்தல் போன்ற கருமங்களில் வெகுசிரத்தையுடன் ஈடுபட்டார். அநாதை இல்லங்களுக்கு அள்ளிக்கொடுப்பதுடன், நீர் இல்லாவிடில் ஆழக்கிணறு தோண்டி, சிறுவர்களேயன்றி அயலவர்களின் தாகத்தையும் தீர்த்தார்.

"பயன்மரம் உள்ளூர்ப்பழுத்தற்றால் செல்வம்
நயன் உடையான் தன் கண்படின்"

என்ற வள்ளுவர் வாக்குக்கு இலக்கியமாய் வாழ்ந்தார். அவர் காந்தீய நிறுவனங்களுக்குச் செய்த பேருதவிகள் "காந்தீயம்" புது மலர்ச்சி பெறும் இவ்விதழில் குறிப்பிடுவதில் மகிழ்ச்சி அடைகிறோம்.

"காந்தீயம்" இவ்விதழின் அட்டையை அலங்கரிக்கும் மகாத்மா காந்தியின் உருவச் சிலை 07.07.1974ஆம் ஆண்டு யாழ்ப்பாண மாநாகராட்சி மன்ற வெள்ளிவிழாவை முன்னிட்டு யாழ் ஆஸ்பத்திரி வீதியில் நிறுவப்பட்டது. இச்சிலையினை சிவதர்ம வள்ளல் அவர்களே அன்பளிப்புச் செய்தார் என்பதைநன்றியுடன் நினைவு கூர்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



“எனது வாழ்க்கையே எனது செய்தி”
மகாத்மாகாந்தி

# காந்தீயம்

இருதிங்கள் இதழ்

இதழ் - 1 2004 ஆக்டோபர்-02


## காந்தீயம் புத்துயிர் பெறுகிறது

*காந்தீயம் சஞ்சிகை அகில இலங்கைகருணைகழகத்தின் தேசிய திங்கள் இதழாக நீர்வேலியில் காந்தி ஆண்டு 79ல் முதன் முதலில் வெளிவந்தது.*

*2-10-48ல் (காந்தி ஆண்டு 80ல்) 2ம் தொகுதி 5 சதம் விலையில் பிரசுரமாயிற்று. முத்துத்தம்பி விதயாசாலையில் பயின்ற இளைஞர்களில் சோ.க. தம்பிப்பிள்ளை சி.க. வேலயுதபிள்ளை, நா.சிவபாதசுந்தரம் முதலியோர் தீவிர முறயற்சி செய்தனர்.*

*1949ல் அதே இளைஞர்கள் மகாத்மா காந்தியுடன் 1927 முதல் தொடர்புற்றிருந்த ஹண்டி பேரின்பநாயகத்தின் தலைமையில் அகில இலஙகைக் காந்தி சேவாசங்கத்தைத் தொடங்கினர். அதன் பிரசாரசாதனமாக “காந்தீயம்” தொடர்ந்து வெளிவந்தது. நீர்வேலியில் இருந்து சில ஆண்டுகள் வெளிவந்தபின், பல ஆண்டுகள் உருத்திரபுரத்திலிருந்தும் 1981ல் கொழும்பிலிருந்தும் பிரசுரமாயிற்று. ரத்மலானையில் அச்சுத்தொழில் பயின்றவர்களின் பணியுடன் குமரன் அச்சகத்தில் பதிப்புற்றது. நாட்டில் ஏற்பட்ட கலகங்கள் காரணமாக இடை நிறுத்தப்பட்டது.*

*சென்ற 22-08-2004ல் அகில இலங்கைக் காந்தி சேவாசங்கம் புதுக்கி அமைக்கப்பட்டது. அப்போது எடுத்த தீர்மானத்தின்படி “காந்தீயம்”, இன்று காந்தி ஜயந்தியன்று வெளிவருகின்றது.*

*துன்ப இயற்கைக் கோட்பாட்டாளர் (Pessimists) சிலர் நினைப்பது போல காந்தீய தத்துவம் செத்துவிடவில்லை. வினோபாஜி, ஜயப்பிரகாஷ் நாராணன் போன்ற காந்தீய வாதிகளைத் தொடர்ந்து பேரறிஞர்பலர் காலத்துக்கு ஏற்றவாறு வளர்த்துக்கொண்டே வருகின்றார்கள். இந்திய அரசும், சாதாரணமக்களும் மேலைத்தேச மோகத்தில் பொருளாதார சீர்திருத்தம், திட்டமிடல், பாரிய கைத்தொழில்களின் வளர்ச்சிக்குமுன்னிடம் கொடுத்தல் போன்ற விடயங்களில் கவனம் செலுத்தினாலும், ஒரு சிறு சிந்திக்கும் ஆன்றோர் கூட்டம் தேய்ந்து வரும் சமூக உறவுகள், அன்பு , அஹிம்சை, சத்தியம் போன்ற உயர் விழுமியங்களை வற்புறுத்தி வருகின்றனர். உலகின் பல நாடுகளிலும் காந்தீய வழியில் சிந்திப்போரும், பொருளாதார சமூகப்பிரச்சினைகளைத்தீர்க்க அவர் காட்டிய திசையில் கருமங்களை முன்னெடுக்கின்றனர். இலங்கையிலும் காந்தி சேவாசங்கம் கடந்த அரை நூற்றாண்டாக நடத்திய சமுகத் தொண்டுகளைத் தொடர்ந்து நடத்த இடமுண்டு. நாம் திடசித்தத்துடன் செய்தே வருவோம் என உறுதி பூணுவோம். பிரதமர் ஜவஹர்லால் நேருவை, தை, 1950ல் நம் சங்கப்பிரதிநிதிகள் கொழும்பு இராணி மாளிகையில் சந்தத்த போது அவர் காந்திஜீயின் நிர்மானத் திட்டங்களை முன்னெடுக்கும் படி வற்புறுத்தியதை நினைவில் வைப்போமாக.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆற்றல் நுகர்வு

**ஈ.எ.ப். ஷுமேக்கர் மரபு வழியை விட்டு சுயமாகச் சிந்தித்த அறிஞர் 1973ல் "சிறிது அழகானது" என்றநூலை எழுதினார். அவர் பழையபொருளியலின் மாதிரி உருக்கள், கொள்கைகள் எல்லாம் ஒருவகை 'மதிப்புமுறை' (Value System)யையும், மனித இயல்பு பற்றிய குறித்த ஒரு நோக்கத்தையும் மட்டுமே அடித்தளமாகக் கொண்டவை. அவை எல்லாம் 'பொருளியல் அதீதம்' என்ற வகையான ஊகங்களை அடிப்படையாக உடையவை. அவைமுற்றாக மாறவேண்டும். உற்பத்தியையும், நுகர்வையும் அளவுகணக்கில்லாமல் பெருக்குவதில் தான் பொருளியல் நிபுனனின் வெற்றி தங்கி உள்ளது என்று நினைப்பது மடமை. மனிதன் தன்சூழல், தன்பண்பாடு ஆகியவற்றை மனத்துள் கொண்டு குறைந்த அளவு நுகர்வையும் அதற்கு மட்டும் போதிய அளவு உற்பத்தியையும் செய்வதே அமைதியான பூரண வாழ்வுக்கு வழிசெய்யும் என்று போதித்தார். ஆனால் நான்கு நூற்றாண்டுகளாகச் சிந்தித்த வழியிலேயே சமூகவிஞ்ஞானிகள் பகுப்பாய்வு முறையில் சிந்திக்கிறார்கள். ஒன்றிணைந்த பூரணமான பார்வையை ஏற்க மறுக்கிறார்கள் என்பதைப் பற்றிவருந்தியவர். "சர்வோதயம்" (2003, ஐப்பசி) இதழில் வெளியான கட்டுரையின் சாரத்தை இங்கு தருகிறோம்.**

உலகில் கிடைக்கும் இயற்கை வளங்களை நுகர்வதில் பெரும் ஏற்றத்தாழ்வு காணப்படுகிறது. நிலக்கரி எடுத்து இயந்திரங்களை இயக்கவும் மின்உற்பத்தி செய்யவும் பயன்படுத்துகின்றனர்.

1966ல் 5.5 மில்லியன்
2000ல் 23.2 மில்லியன்

இதில் பணக்காரர் 17.7 மில்லியனை எடுக்க, அதாவது 2/3பங்கை எடுக்க, ஏழைகள் 1/3 மட்டுமே எடுப்பர். அடுத்த 34 ஆண்டுகளில் 425 மில்லியன் தொன் உலகில் தேவைப்படும். இதில் 75% பணக்காரர் நுகர, ஏழைகள் 25% மட்டுமே பெறுவர்.

பணக்காரர் தம் ஆடம்பர வாழ்க்கைக்காக, இயற்கையைச் சேதாரமாக்கும் செயற்பாடுகளில் கூடியளவு ஈடுபடுகிறார்கள். உலகின் இயற்கைவளங்கள் (நிலக்கரி, எண்ணெய்) ஒரளவுக்கு உட்பட்டே இருக்கின்றன. 2000ம் ஆண்டிலிருந்து பணக்காரர் தம் எரிபொருள் தேவைகளைக் குறைக்காவிட்டால் பெரும் ஆபத்து உண்டாகும். எரிபொருள் படிவங்கள் இல்லையானாலும், அணுஆற்றலைப்பயன்படுத்தி மின்சாரம் பெறலாம் என்கிறார்கள் விஞ்ஞானிகள். ஆனால் அதற்குவேண்டிய செறிவு ஊட்டப்பட்ட யூரேனியம் உலகின் உட்பகுதியில் இல்லை என்கிறார்கள். சிலர் இருப்பதை எடுத்தால் போதும் என்கிறார்கள். ஆனால் சனநெருக்கம் உள்ள இடங்களில் மிகுந்த கதிர் இயக்கத்தன்மை உள்ள அணுமின் நிலையங்களை அமைத்தால், அவை உயிரினத்துக்குச்செய்யும் தீங்கை நினைத்துப் பார்க்கவும் முடியாது.

இதுவரை கண்டறியப்படாத புதிய எரிபொருள் படிவங்கள் பூமிக்கு அடியில் இருந்தாலும், அவற்றை பயன்படுத்தும் போது அவைவெளியேற்றும் வெப்பம் இதுவரை நாம் அறியாதவிளைவுகளை ஏற்படுத்தும். எரிபொருள் நுகர்வு 4 மடங்குக்கு மேலே போகப்போக, மாசுக்களைப் போக்கும் வழிமுறையே இல்லை என்ற நிலை ஏற்படும். (நம் நகர்ப்புறங்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிற்சாலைகளுக்கு அருகில் வசிப்போர் தூசுகள், வெப்பம் பற்றிப் பேசுகின்றனர். அரசோ, கிராமமக்களோ இதனை அறியாதவர் போல வாளா இருக்கின்றனர்.)

எரிபொருள் பற்றிய பிரச்சினை ஒன்றே இங்கு முன்வைக்கப்பட்டது. பௌதீக, இரசாயன, தொழில் நுட்ப நோக்கில், எண்ணற்ற பிரச்சினையைக் காணலாம். சூழல் மாறுதல், மாசடைதல் என்ற நோக்கில் மேலும் அதிகபிரச்சினைகள் எழும். பொருள் சம்பாதிப்பது ஒன்றே இலட்சியம் என்ற முடிவுக்கு மனிதன் தள்ளப்பட்டுள்ளான். இதில் எந்த இயலும், அறக்கோட்பாடுகளும் தலையிடக்கூடாது என நினைக்கின்றான். இயற்கை தன் மீது சுமத்தப்படும் அழுத்தங்கள் ஒரு எல்லையை மீறிவிட்டது என எச்சரிக்கிறது. ஒரு சிக்கலைத் தீர்க்க, பத்துச் சிக்கல்கள் தோன்றுகின்றன. பேராசிரியர் பேரி. கம்மோனர் "நிகழ்ச்சிகளின் தோல்விகளால் புதிய சிக்கல்கள் தோன்றா; ஆனால் தொழில் நுட்ப வெற்றிகளால் தான் தோன்றுகின்றன" என்கிறார்.

சிந்திக்கும் மக்கள் இருவகை:

1. நடப்பதெல்லாம் நன்மைக்கே என்போரும்
2. எல்லாம் தீனமக்கே எனக்காண்போரும்

நம்பிக்கைவாதிகள் தற்காலிகமாக அறிவியல் சில சிக்கல்களைத் தோற்றுவித்தாலும், அது எப்படியாவது, சிக்கலிலிருந்து மீளவும் வழிகண்டுவிடும் என நம்புகின்றனர். மனித உணர்வும், மனிதவிஞ்ஞான முனைவும் ஒத்து நடப்பதில்லை. உணர்வு எச்சரித்தாலும், விஞ்ஞானி தன் தொழிநுட்பத் திறனைக்காட்டி விடவிரும்புகிறான். அறிவியல் தொழில் நுட்பம் கடந்த 100 ஆண்டுகள் (சந்தர்ப்பம் சூழ்நிலைகளால் ஏற்படும் தீமைகளை விட) அதிக தீமைகளை வேகமாகப் பெருக்கி விட்டது.

பூவுலகச் சூழல் தனது சமநிலையை இழந்து விட்டது. பேராசிரியர் பேரி. கம்மோனர் இரு தசாப்தத்துக்கு முன்னரே எச்சரிக்கை செய்தும், உரிய கவனம் செலுத்தாமையால் ஏரீவாவியில் சூழல்மாசு மிக உச்சநிலைக்குச் சென்றுவிட்டது. அமெரிக்காவில் பெரும் பாலான உள்ளூர் நீர் நிலைகள் மாசு உற்றன. சமநிலை இழப்பு எங்கும் பரந்து விட்டது. மேலும் மோசமான விளைவுகள் பெருகும்.

எல்லையற்ற பொருளியல் வளர்ச்சி, ஒவ்வொருவரும் சொத்துச் சேர்க்கும் போட்டி என்பவற்றை இரண்டு விதமாகக் கேள்விக்கு உட்படுத்தவேண்டும்:

1. அடிப்படை மூலவளங்களின் இருப்பு
2. சீரழிந்த சூழலை திருத்தி அமைத்தல்

பேராசை, பொறாமை, போட்டி என்பன வளர்ந்து கொண்டே போகின்றன. இதனால் ஏற்படும் தவிர்க்க முடியாத புத்திக்கூர்மையான சீரழிவே எல்லாச் சமூகங்களும் பேராசையால் பீடிக்கப்பட்டு விட்டால், அவை தங்கள் அடிப்படையான, பிழைப்புக்கான, சிறுசிறு சிக்கல்களைத் தீர்க்கவும் முடியாமல் திணறும் பொருளியலரும் வரும் புள்ளி இயலரும் தேசிய உற்பத்தி (G.N.P) பற்றிப் பெரிதுபடுத்திப் பேசலாம், ஆனால் அவை மக்களால் அனுபவிக்கப்படாமல் உள்ளன. அவர்கள் விரக்தியுற்றும், அந்நியமயமாகியும், பாதுகாப்பு உணர்வு அற்றும் தங்களுக்குள்ளேயே நசுங்கிக்கொண்டிருக்கிறார்கள்.

சில ஆண்டுகளாக மொ.தே உற்பத்தி குறைந்து போனதற்குக் காரணம் அறிவியல் தொழில் நுட்பத்தால் அல்ல, மக்கள் ஒத்துழைக்கவில்லை. உழைப்போர் உழைப்பில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்து தப்பிவிடுகின்றனர். நசுக்கப்படும் உழைப்பாளிகள் மட்டுமின்றி, எல்லாச் சலுகைகளும் பெற்றுள்ள மேட்டுக் குடிகளும் இதே வழியில் செல்கின்றனர்.

உயர் வகுப்பினரும் துன்பத்தில் கிடக்கும் வகுப்பினரும் தம் கூர் அறிவில் சுலபமாக விளங்கக்கூடியவற்றைக் கூட அறியாது இருக்கினறனர். பேராசை, பொறாமை என்பன அவர் அறியும் திறனை மறைத்திருக்கலாம். "மனிதன் பாணுக்காக மட்டும் வாழவில்லை, கடவுளின் ஒவ்வொரு சொல்லுக்காகவும் வாழ்கின்றான்" என்பது ஒரு பழமொழி உறங்குவது, புலன் இன்பங்களை நுகர்வது என்ற குறுகிய வட்டத்துக்குள்ளேயே சுற்று கின்றனர். பணக்காரவர்க்கத்தில் தீவிரமாகப் பரவிவரும் இந்தநோய், அவர்கள் செய்வது எல்லாம் சரி எனநினைக்கும் மத்திய, கீழ்வகுப்பாரிடையேயும் பரவுகிறது. அறிவியல், சட்டம் என்பன இந்நோயைத்தீர்க்கமாட்டா. இப்போது உலகெங்கும் மலிவாக நுகர்வுப் பொருள்கள் கிடைக்கின்றன. ஆகவே மனிதனும் முன்னிலும் மகிழ்ச்சியாக உலகவாழ்வைக் கழிக்கிறான் என்ற கருத்துப் பிழை. பணக்காரர் உலகியல் தேவைகளை இலகுவாகப் பெறுவதால் மகிழ்ச்சியுடன் வாழ்கிறார்கள் என்று நினைப்பது பிழை. பேராசை, பொறாமை மற்றவன் வாழக்கண்டு சகிக்காமை, தம் பொருளைப் பிறர்எடுத்துக் கொள்வாரோ என்ற ஏக்கம் அவர்களை வாட்டுகிறது. அவர்கள் மற்றவரிலும் மிகக் கூடிய அளவு நுகர்ச்சிப் பொருள்களைத் தமக்கென எடுத்துக் கொள்வதால், இயற்கைவளங்களைக் கடுமையாகச் சுரண்டுகிறார்கள். இதனால் மிகக்கொடிய சீரழிவு ஏற்படுகிறது.

இன்று மனிதன் தன் புத்திசாலித்தனத்தால் சீவிக்கலாம், ஞானம் தேவையில்லை என்று கூறுவார் உளர். ஆனால் அமைதிக்காகப் பணிஆற்றிய எல்லாரும் மக்களின் ஞானத்தை மீட்டெடுப்பதில் வெகுகவனம் செலுத்தி உள்ளனர்.

நேர்மை, அறம் என்பவற்றை ஒதுக்கி வைத்துவிட்டு, உலகளாவிய வளத்தை எட்டி விட்டு, பிறகு அவற்றைக் கைக்கொள்ளலாம் என்பது கருத்தற்றது, நடைமுறைக்கு ஒவ்வாதது. பொருளியல், அறிவியல், தொழில் நுட்பம் என்பவற்றிலிருந்து ஞானத்தை ஒதுக்கி வைத்துவிட்டுப் போவது, சார்பியல் அளவில் வெற்றிதராது.

பொருளியல் பார்வையில் ஞானத்தின் நடுநாயகமான கருத்து நிலைபேறு. நாம் நிலைபேற்றுப் பொருளியல் (Economics and pernancnce) பற்றிப்படிக்க வேண்டும். எதையும் பொருளியல் பார்வையோடு முன்வைக்காமல் நீண்டகாலத்துக்கு நிறுத்துவது அறிவுக்கு ஒவ்வாதது. வளர்ச்சி என்பது வரையறைக்கு உட்பட்டது. முடிவிலா வளர்ச்சி என ஒன்று கிடையாது. "இப்பூவுலகு ஒவ்வொரு மனிதனின் தேவையையும் நிறைவுசெய்யும், ஒவ்வொரு மனிதனின் பேராசையையும் நிறைவு செய்யமுடியாது" என்றார் காந்திஜீ. நிலை பேறு என்பது சூறையாடும் மனப்போக்குக்குப் பொருந்தாது. நேற்று நம்முன்னோர் ஆடம்பரப்பொருள் என நினைத்தது, இன்று எமக்கு அத்தியாவசியப் பொருளாக மாறியுள்ளது இப்போக்கு ஏற்பு உடையது அன்று.

தேவைகளை விஸ்தரித்துக்கொண்டே போவது ஞானத்துக்கு எதிரானது, விடுதலை, அமைதி என்பவற்றுக்கு எதிரானது. **



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பன்னாட்டு நிறுவனங்களும் ஏழைக் கமக்காரரும்

"சர்வோதயா" (ஆங்கில இருமாத சஞ்சிகை) மதுரையிலிருந்து வெளிவருகின்றது. நல்லசிந்தனையாளர்கள் காந்தீய தத்துவம் இன்றைய அவலம் நிறைந்த உலகுக்கு அவசியமானதே என விளக்கும் கட்டுரைகள் பிரசுரமாகின்றன. 2004 பங்குனி-சித்திரை இதழின் பத்திராதிபர் குறிப்பு இங்கு தரப்படுகிறது. ஆ-ர்

உலகமயமாதலின் தாக்கத்தால் ஏற்றுமதியை நோக்கமாகக் கொண்ட விவசாய வர்த்தகத்துக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. விவசாயம் கிராமத்தில் உள்ள நுகர்வோரின் அல்லது சில சுற்றுப்புறக்கிராமத்தவரின் தேவைகளைப் பூர்த்தி செய்வதையே முதல் நோக்கமாகக் கொண்டிருக்கவேண்டும். காந்தி அடிகள் உணவு, உடைபோன்ற உயிர் நாடியான வாழ்க்கைத்தேவைகளை அடையும் விடயத்திலேனும் கிராமம் தன்நிறைவு பெற்றதாயிருக்க வேண்டும் எனக் கனாக்கண்டார். ஒரு கிராமம் இப்படித்தன்னிறைவு பெறமுடியாவிட்டால், ஒரு கூட்டம் கிராமங்களை ஒன்றிணைத்துத் தன் நிறைவுப் பொருளாதாரத்திட்டத்தை வகுக்கலாம் எனக்கருதினார்.

பசுமைப்புரட்சி என்ற பெயரால் நவீன மேனாட்டுத்தீவிர கமத்தொழில் முறையைப் பின்பற்றியபின் தானிய உற்பத்தியில் தன் நிறைவுக்கு மேலதிகமாயும் தானியம் கிடைத்தது. ஆனால் அதே சமயம் மண் வளத்தைப்பாழாக்கினோம், நீர் மூல வளங்களை மாசு அடையச் செய்தோம், உணவுத் தானியங்களை நஞ்சாக்கினோம். இப்பசுமைப் புரட்சியின் பயனாக ஏழை-பணக்கார இடைவெளி பெரிதாகியது.

மக்களிடையே குறிப்பாகக் கமக்காரிடையே பசுமைப்புரட்சியின் தீய பலன்களைப் பற்றிய சிந்தனை பரவியுள்ளது. ஆகவே அவர்கள் பயிர்த்தொழிலுக்கு இவ்விஞ்ஞான முறையினின்றும் மாறுபட்ட, தீய விளைவுகள் இல்லாத, முறைகளை நாடுகிறார்கள். சேதன உரம் (இயற்கையான இலை, குழை, சாணம் போன்றவை) மூலம் மண்ணின் வளத்தைப் பெருக்கியும், ரசாயன உரம், கிருமிகொல்லி ஆகியவற்றைத் தவிர்த்தும் உணவு நஞ்சாவதைத் தடுக்க விரும்புகிறார்கள்.

கியூபா, முன்னர் சோவியத் நாட்டின் எண்ணெய் போன்றவற்றை விவசாயத்துக்கு நம்பியிருந்த நிலையை, சோவியத் ஒன்றியத்தின் வீழ்ச்சிக்குப் பின், கைவிட்டது. சேதன உரப்பயிர்ச்செய்கை மூலம் நல்வாழ்வு நடத்தலாம் என்பதை உலகுக்கு காட்டி வருகிறது. இப்பாடத்தை அபிவிருத்தி அடையும் நாடுகள் தம் விவசாயத்துறையில் பின்பற்றுவது நல்ல பலனைத்தரும்.

ஒரு சில பன்னாட்டுக்கம்பனிகள் உலகுமுழுவதும் உள்ள விவசாயத்தைத் தம் கைக்குள் கொண்டு வருவதற்காக தமது ரசாயன உள்ளீடுகளையும் பரம்பரையலகு மாற்றுமுறையில் ஆக்கிய விதை தானியங்களையும் பிரசாரம் செய்து வெற்றி பெறும் தறுவாயில் நாம் விழிப்புடன் இருக்கவேண்டும்.

எமது விவசாயப்பட்டதாரிகளும், 'நிபுணர்களும்', கண்ணை மூடிக்கொண்டு மேனாட்டு விஞ்ஞான முறையே வறுமையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழிக்க வழி எனக் கமக்காரரிடையே பிரசாரம் செய்கின்றனர். அதற்கு மாறாக சேதனவிவசாயம், தொன்மையான இயற்கைக்கு மாறில்லாத விவசாய முறைகளை, ஜே.சி.குமரப்பா, மசனோபு.·.க்கு ஓவா (யப்பானியர்) போன்ற வர்களின் வழியைப் பின்பற்றி விவசாயப் பெருமக்களிடையே பரப்பும் பணியை மேற்கொண்டுவருகின்றனர்.

விவசாய வர்த்தகமுறையில் ஆயிரக் கணக்காண ஏக்கர் நிலம் ஒரு நிர்வாகத்தில் இருந்தால் தான், யந்திரமயமாக்கவும், உற்பத்தியை மிகப் பெருக்கி, சந்தைப்படுத்தவும் வாய்ப்பு ஏற்படும். எமது பழைய சேதன விவசாயத்தில் 5 அல்லது 10 ஏக்கர் நிலமும், சிறு மூலதனமும் போதும். பெருநிலவிவசாய அலகுகளை நிர்வகிக்க என்று நிலத்தைப்பறித்து சிறுகமக்காரரைத் துரத்துவதும், நிலமற்றோர் பரம ஏழைகளாய் வாழவழியின்றி இருப்பதும் கண்கூடு.

(இந்தியாவில் ஆதிவாசிகளின் நிலங்களைப் பறிப்பதும் பெரிய கைத்தொழிற் சாலைகளுக்காக சிறு கமக்காரரின் நில உரிமையை பிடுங்குவதும் பற்றிய விபரங்கள் தரப்பட்டுள்ளன.)

'முதலில் நிலம்' பற்றிய மும்பாய் மகாநாடும் உலக சமூக முன்னணி என்ற அமைப்பின் கூட்டமும் ஒரே காலத்தில் நிகழ்ந்தது. மெச்சிக்கோ, பிறேசில், கம்போடியா, அவுஸ்ரேலியா, கனடாவில் கூட இப்படி ஏழைக்கமக்காரரின் நிலம் அபகரிக்கப்படுவது பற்றிய விபரங்கள் கிடைத்துள்ளன. அங்கெல்லாம் மக்கள் அஹிம்சை முறையில் இக்கொடுமையை எதிர்த்துப்போராடி வெற்றி பெற, மத்திய இந்தியாவில் தொடங்கிய முயற்சியை வெகுஅவதானத்துடன் நோக்கும் போக்கைக் காண்கிறோம். இந்தியா காந்திய முறைப்போராட்டத்தைக் குற்றமற்ற முறையில் முன்னெடுத்து, அந்நாடுகளில் துயருறும் மக்களுக்கு வழிகாட்டும் கடமை எமக்கு உள்ளது. ***

1ஆம் பக்கத் தொடர்ச்சி..........

நிர்வாகசபை உறுப்பினர்கள்

| | | |
|---|---|---|
| 1. | திரு. ஆ. வடிவேலு | - வடமராட்சி |
| 2. | திரு. ச. கந்தவேள் | - திருநெல்வேலி (சரவணை) |
| 3. | திரு. பொ. கந்தையா | - திருகோணமலை |
| 4. | திரு. செ. ஆனந்தகிருஷ்ணகுமார் | - மூளாய் |
| 5. | திரு. தி. சோமாஸ்கந்தராஜாகுருக்கள் | - தும்பளை |
| 6. | திரு. கு. கதிரைவேலு | - வவுனியா |
| 7. | திரு. க. அருளானந்த சிவம் | - காரைநகர் |
| 8. | செல்வி. லூர்துநாயகி சிலுவைதாசன் | - மன்னார் |
| 9. | திரு. அ. வாசுதேவா | - சாவகச்சேரி |
| 10. | செல்வி. க. ஜீவானந்தா | - உடுப்பிட்டி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீரை வியாபரப்பெருளாக்கும் வணிக கலாசாரம்

A-9 பாதைதிறந்த பின் வடபகுதியிலும் பிளாஸ்ரிக் போத்தல்களில் அடைத்த நீர் 90ரூபாவரை விற்கப்படும் அதிசயத்தைக் காண்கிறோம். ராட்சத கணிப்பு முறை, புள்ளிவிரங்களைக்கொண்டு இன்னும் மூன்று தசாப்தங்களில் உலகெங்கும் தண்ணீர் பற்றாக் குறை ஏற்படும் என்ற பூச்சாண்டிமூலம் மூன்றாம் உலக நாடுகளை அச்சுறுத்தி, அரசாங்கம் நாட்டின் நீர்வளத்தை அரசுடை மையாக்க வேண்டும்; நீரைப் பங்கிடும் உரிமையைத்தானே வைத்திருக்க வேண்டும் என்று பன்நாட்டு நிறுவனங்கள் புத்தி சொல்கின்றன. அற நெறிகளைத் தூக்கி எறிந்த அமைச்சர்கள் அவற்றின் வலைக் குட்பட்டு, அவர்களது வஞ்சகத் திட்டத்துக்குத் துணை போகின்றனர். இலங்கையிலும் அத்திட்டம் 2005ல் அமுலாகும் எனப்பத்திரிகைகள் செய்தி வெளியிடுகின்றன. நம்வளவில் நிற்கும் வேம்பிலிருந்து நாம் மருத்துவப் பயன் பெறமுடியாது, தறித்து பலகையறுக்கமுடியாதது போல, நம்கிணற்று நீரைப்பருகவும் உரிமை அற்ற விலங்குகளாக்கப் படுவோம். இந்தியாவில் 'கொக்காகோலா' நிறுவனங்கள் சில பிரதேசங்களில் தண்ணீர் உரிமையைப் பெற்று ஆழ்குழாய்கள் மூலம் நிலத்தடிநீரை உறிஞ்சி இனிப்புப்பானமாக்கி, மக்களை ஏமாற்றி விற்பதும், கமக்காரர் தண்ணீர் இன்றித் தம் பாரம்பரிய நிலங்களை விட்டு இடம் பெயர்ந்து நகர்ப்புற ஏழைகளாகித் துன்புறுவதும் மக்கள் நலனில் அக்கறையுள்ள காந்திய வாதிகளின் கவனத்தை ஈர்த்துள்ளது.

"சர்வோதயம்" (மதுரை) மாத இதழ் ஆனி, 2003 இல் வெளிவந்த நேர்காணலில் 2001இல் விருது பெற்ற இராஜேந்திரசிங் ராஜஸ்தான் மாநிலத்தில் அரச உத்தி யோகத்தை விட்டு, குடியேறி மக்களின் நீர்த்தட்டுப்பாட்டைத் தீர்க்க வழிசெய்தார். மூன்று ஆண்டுகளில் ஒரு குளம் தோண்டி, மழைநீர் தேக்க வழிசெய்தார். நான்காம் ஆண்டில் 9 குளங்களும் பின் மக்கள் உதவியால் இன்றுவரை 700 குளங்களும் அமைத்தார். 1058 கிராமங்களின் நீர்ப்பிரச்சினை தீர்ந்துவிட்டது. அவர் கூறிய கருத்துக்கள் "தண்ணீர் என்பது அரசின் சொத்தாக இல்லாமல் மக்களின் பொதுவளமாக இருக்க வேண்டும். ஆறுகள் இணைப்பு நீர்ப்பிரச்சினையைத் தீர்க்காது, மேலும் பலசூழலியல் சிக்கல்கள் ஏற்படும். மாநிலங் களுக்கிடையே பிரிவினையும் பூசலும் எழும், பன்னாட்டு நிறுவுனங்களுக்கு நமது நீர் நிலைகளைத் தாரைவார்த்து விட்டு, அந்த நீரைக்காசு கொடுத்து வாங்க வேண்டிய நிலையில் உள்ளோம். இதற்கு இங்குள்ள அரசுகளும் துணைபோகின்றன. நாம் ஒவ்வொருவரும் பிளாஸ்ரிக் போத்தல் நீரை எக்காரணம் கொண்டும் வாங்கக்கூடாது என்ற உறுதிமொழியை எடுக்க வேண்டும். இதை விளம்பரமோகத்தில் நகர்ப்புறவாசிகளுக்கும், அவர்களைப் பின்பற்றுவதே நாகரிகம் என்று நினைக்கும் கிராம வாசிகளுக்கும் எடுத்துக் கூறவேண்டும். பன்னாட்டு நிறுவனங்களை இதன் மூலம் அடித்து விரட்டமுடியும். **



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொரியா காந்தி - ஹாம் சோக் ஹான்

கொரியாவின் வடமேற்கு மூலையில் ஒரு சிறு கிராமத்தில் 1901ல் பிறந்த இவர், கிறீஸ்தவக் கல்விக்கூடத்தில் கல்வி பெற்றர். 1910ல் யப்பான் கொரியாவைக் கைப்பற்றியது கிறீஸ்தவர்களைத் துன்புறுத்தியது. 1919ல் முதலாம் உலகப்போர் முடிந்தபின் அமெரிக்க ஜனாதிபதி வில்சன் 14 அம்சத் திட்டத்தை முன் வைத்தார். மக்கள் இனங்கள் தம் விதியை தாம் தீர்மானிக்கலாம்; வலு மிக்க அரசுகள் சிறுபான்மையினரை அடக்கக்கூடாது என்ற கருத்து முற்போக்கு இளைஞரைக் கவர்ந்தது கொரியாவில் அகிம்சைமுறையிலான அந்நிய எதிர்ப்பு இயங்கம் தோன்றியது ஹாம்சோக்ஹான் அதில் பங்குபற்றினார் ஆங்கில எழுத்தாளர் எச். ஜீ. வெல்ஸ் தமது 'வரலாற்றுக்குறிப்பில்' (Outlines of History) போரேகூடாது என்ற வாதத்தைப் பிரபலப்படுத்தினார் ஹான் அதை வாசித்தார். ஜப்பானுக்கு உயர்கல்விக் காகச்சென்றார். சோஷலிச இயக்கத்தில் சேர்ந்தார். 1928ல் தாயகம் திரும்பினார் கல்விப்பணிபுரிந்தார். கல்வியானது தார்மீகம், ஆன்மீகம் இரண்டையும் இணைத்து வளர்க்கவேண்டும் என்ற முடிவுக்கு வந்தார். பழத்தோட்டம் அமைத்து விவசாயியானர் "கொரியா வரலாற்றில் பொருள்" என்ற நூலை எழுதினார்

ஜப்பான் கொரியாவில் கல்வியைத் தன் கட்டுப்பாட்டுக்குள் வைக்கமுயன்றது தாய் மொழிக்கல்வி மறுக்கப்பட்டது. ஹான் தம் ஆசிரியப்பதவியை விட்டு விலகினார். உழைப்பும் கல்வியும் இணைத்த இலவசப்பாடசாலையை அமைத்தார் (இது காந்திஜீயின் ஆதாரக் கல்வியை ஒத்தது). ஜப்பானிய ஆட்சியாளர்கள் அவருக்கு ஒருவருட சிறைத்தன்டனையை அளித்தனர்.

இரண்டாம் உலகப்போர் முடிவில் ஜப்பான் தோல்வியுற்றபின் கொரியாவில் அடித்தளத் திட்டமான சுயாட்சிதோன்றியது. ஹான் தம் கிராமஇயக்குனராகத் தேர்வுற்றார் விரைவில் மாநில கல்வி அமைச்சர் ஆனார்.

கொரியா போர் முடிந்து, நான்கு வல்லரசுகளின் ஒப்பந்தப்படி 38ம் அட்சரேகைக்கு வடக்கே ருஷ்ய ஆட்சியமைக்கப்பட்டது. கொரிய பொதுவுடைமைக்கட்சி அதற்கு உதவியது. அரச பயங்கரவாதத்தை எதிர்த்து மாணவர்கள் கிளர்ச்சி செய்தனர். ருஷிய ஆளுவோர் ஹான் தான் இதற்கு வழிகாட்டி எனக்கருதி 50நான் இராணுவச் சிறையில் அடைத்தனர் விடுதலை அடைந்தபின் அவரை நண்பர்கள் தென்கொரியாவுக்கு அனுப்பினர். அங்கு சியோல் நகருக்கு அன்மையில் வாழ்ந்து, காந்திஜீயின் அகிம்சை முறை எதிர்ப்புப் பற்றி ஆழ்ந்து படித்தார். 1953ல் காந்தி கல்விச்சங்கத்தின் உதவியுடன் தோரோஎழுதிய சட்டமறுப்புஎன்ற நூலை மொழிபெயத்தார். "சிந்திக்கும் மக்களே வாழமுடியும்" என்ற நூலில் அப்போதைய அரசைக்கண்டித்ததால் மீண்டும்சிறை சென்றார்

1960இல் மாணவர் எழுச்சி அரசைக் கவிழ்த்தது எனினும் செயல்திறனற்ற பலவீனமான ஜனநாயக அரசு பதவியேற்றது. "புது யுகத்தின்மீது நோக்கு" என்ற நூலை இக்காலத்தில் ஹான் எழுதினார். மகாத்மா காந்தியின் சுயசரிதையை மொழிபெயர்த்து வெளியிட்டார். இராணுவப்புரட்சியின்பின் ஏற்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசும் அவர் கண்டனத்துக்குள்ளாகியது. அவரது வரலாற்றுக்குறிப்பு "விரைவு நடை" என்ற நூல் வடிவம் பெற்றது

அமெரிக்கா .சென்று குவேக்கர்மதக் கல்விக் கூடத்தில் தங்கினார். மீண்டும் கொரியாதிரும்பி அரசின் போக்கை எதிர்த்துக் கட்டுரை எழுதியும் பல்கலைக்கழகத்தில் விரிவுரைகள் ஆற்றியும் மக்கள் சிந்தனையை நீதியான அரசு, நல்ல வாழ்க்கை முறை என்பவற்றின் பக்கம் திருப்ப முயன்றார். ஜப்பானிய கொரிய இயல்பு நிலை ஒப்பந்தத்தை எதிர்த்து உண்ணாவிரதம் இருந்தார்.

1967இல் அமெரிக்கா சென்று உலக நண்பர்கள் மகாநாட்டில் கலந்து கொண்டார். நண்பர்கள் தார்மீகக் கழகத்தில் உறுப்பினரானார். 1969இல் காந்தி நூற்றாண்டு விழா நினைவாகப் பல சொற்பொழிவுகள் ஆற்றினார். "மக்கள் குரல்" என்ற மாத சஞ்சிகையைத் தொடக்கினார். அரசு அச்சகத்தை மிரட்டி அது வெளிவராமல் தடுத்தது.

1971இல் இந்திய காந்தி சமாதான நிறுவனமும், சர்வோதய இயக்கமும் அவரை இந்தியாவுக்கு அழைத்தன. காந்தீயப் பணிகள் நடைபெறும் இடங்களைப்பார்த்தார். மதுரைக்குத் தெற்கே உள்ள கல்லுப்பட்டி காந்திநிகேதனமும் அதைச்சுற்றியுள்ள கிராமங்களின் நிர்வாகமும் அவரைக்கவர்ந்தன. "சத்தியத்தை நாடிச் செல்லும் எளிய ஊழியன்நான் என்னைக் காந்தியுடன் ஒப்பிடுவது சரியல்ல" என்று தன்னடக்கத்துடன் கூறியவர் ஹான். **

கிராமராஜ்யம் 26.03.1971ல்பிரசுரித்த கட்டுரை சர்வோதயம் (மதுரை) தை. 2004ல் மீள் பிரசுரம் செய்யப்பட்டது.

# காந்தியும் ஸ்மட்சும்

தென்னாபிரிக்காவில் வெள்ளையர் ஆட்சிக்காலத்தில் காந்திஜீ சத்தியாக் கிரகம் செய்து சிறை சென்றார். சிறையில் தம்கையால் பாத அணிசெய்து, அரசாங்கம் நடத்திய ஸ்மட்சுக்குப் பரிசாக அனுப்பினார். ஸ்மட்ஸ் முன்னர் போயர் யுத்தத்தில் ஆங்கிலேயருக்கு எதிராக போயர்(டச்சு) இனத்தவர் சார்பில் போரிட்டவர். அவர் நேர்மை, போர்த்திறமை காரணமாக பிரதமர் ஆனவர். காந்திஜீயின் பகைவனையும் வெறுக்காத பாங்கு ஸ்மட்ஸின் உள்ளத்தைக் கவர்ந்தது. அவரது புனிதக்கைகளால் செய்த காலணியை கண்ணாடி 'ஷோக் கேசி'ல் அரும் காட்சிப்பொருளாக வைத்திருந்தார்.

பிற்காலத்தில் ஸ்மறஸின் மாபெரும்நூல் காந்தியடிகள் ஒரு அனுபூதிமானாக (Mystic) மலர்ச்சியுற வேண்டியவர் அரசியலில் ஈடுபட்டதால், ஞான ஏணியின் உச்சியை அடையத் தவறிவிட்டார் எனக் குறிப்பிட்டது. பிரான்ஸின் பிரதமர் கர்தினால் ரிஷ்லியூவின் (உத்தியோகப் பற்றற்ற) வெளிநாட்டு மந்திரிபோலத் திகழ்ந்த பிதாயோசப் அரசியற் சகதியில் தாழ்ந்ததால் தமது அநுபூதிவழியைக் கைவிட்டதை அல்டஸ் ஹக்ஸ்லி என்ற ஆங்கில எழுத்தாளர் ("Grey Excence" என்ற நூலாக எழுதினார். அதை நினைவூட்டி ஸ்மட்ஸ் காந்தியை அளவிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் அறிமுகம்

**நூலின் பெயர்:-**

**ஆன்மவிசாரம்**

**ஆசிரியர்:-**

**வே. சுப்பிரமணிய ஐயர்**

**(1857-1912)**

**வெளியீடு:-**

**வேதாந்த மடம்**

**யாழ்ப்பாணம்**

**(நான்காம் பதிப்பு)**

**பக்கங்கள்**

XII + 50

**விலை 100/=**

எத்தனையோ விசாரங்கள் எம்மை உலைகக்கும் போது, ஆன்மா பற்றிய விசாரம் எப்படி எழமுடியும்? என்று நினைத்தல் இயல்பே.

எனினும் ஆன்மா பற்றிய விசாரம் இருக்கவே இருக்கிறது என்பதை இவ்வரிய நூல் உறுதிப்படுத்துகிறது.

மனிதன் தனது ஆற்றலில், நம்பிக்கை உள்ளவன் தான் ஆனால் தன் அறிவு ஆற்றல் கொண்டு வெல்ல முடியாத, சமாளிக்க முடியாத நிலைவரும் போது தான் "கடவுளே" என்கின்றான். அதிமனிதர்களாக வாழ்ந்த பலரின் கதைகளை எமது இதிகாச புராணங்கள் கதையாகவே கொள்கின்றன. கேட்டுமிருக் கின்றோம். படித்தும் இருக்கின்றோம். பயன் படுத்துகிறோமா? இது ஒரு பெரிய வினா.

பயன் பெரிதுபெறவில்லை காரணம்? அது தானே ஆன்மாவின் தன்மை.

"தன்னை அறிந்து தலைவனை அறி"

தன்னை அறிதலே ஆன்மவிசாரம் நான் ஆர்? எங்கிருந்து வந்தேன்? என்ன செய்கிறேன்? ஏன் செய்கிறேன்? எங்கு போக இருக்கிறேன்? இவ்வினாக்களைக் கேட்டுக்கேட்டு விடைகாண முடியாது காடு போனவர்கள் முடிதுறந்தவர்கள் கதைகள் தான் எத்தனை?.

கதைகளைக் கேட்கும்போதும், படிக்கும்போதும் நேரில் காணும் போதும் "சுடலை ஞானம் போல" சிந்தனைகள் படக்காட்சி போல வந்து போகும். ஒருசில நிமிடங்கள் ஆன்மவிசாரம் ஏற்படும். நிலைக்காது. காரணம்!

எமது தவம் அவ்வளவு தான்.

**க.சிவராமலிங்கம்**

மனிதப்பிறவி மகத்தானது. சிந்திக்கவும், தெளியவும் ஆற்றல் உடையது பிறவி மனிதப்பிறவியே.

மனிதா உன் ஆற்றலை நீ தெரிந்து உன்பிறப்பின் குறிக்கோளை உணர்ந்து செயற்படுவாயானால் நீயே அவனாய் அவனே நீயாய் நிலை பெறுவாய் என்கின்றன சாத்திரங்கள்.

இந்த நிலை எய்தச் சில படிகள் ஏறவேண்டும் தாண்டவேண்டும் உன்னைநேசி.

உன் எதிரிகளையும் நேசி.

நல்லவற்றையேசிந்தி.

நல்லவற்றையே பேசு.

நல்லவற்றையே செய்.

இன்பம் வந்த போதும் உன்னை மறக்காதே துன்பம் வந்தபோது அழுது புலம்பாதே இன்பமும் துன்பமும் இரவும் பகலும் என்று நினை.

இப்படிப் பல படிகள் ஏறி உன்னைத் தெரிந்துகொள் தலைவன் தானே வெளிப்படுவான் ஆம்மவிசாரம் பாமரர் தொடக்கம் பண்டிதர்கள் வரை அஞ்ஞானி முதல் விஞ்ஞானி வரை படித்துப் பயன்பெற வேண்டியதால் காலத்துக் கேற்ற ஔடதம் **

இப்பத்திரிகை 171, முதலாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் வசிக்கும் திரு.சோ.க.தம்பிப்பிள்ளை அவர்களால் அகில இலங்கை காந்தி சேவா சங்கத்திற்காக 2004ம் ஆண்டு அக்டோபர் மாதம் 2ம் திகதி பரமேஸ்வராச் சந்தி, அம்பாள் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. இதழாசிரியர். தி. உதயசூரியன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org